சிறிய (வயது) முஸ்லிம்

முஸ்லிம் சிறார்களுக்காக, இஸ்லாத்தின் அடிப்படைகள், ஒழுக்க மாண்புகள் பற்றி தொகுக்கப்பட்ட தகவல்கள்.

"சிறிய வயது முஸ்லிம்" என்ற நூல் தமிழாக்கம் செய்யப்பட்ட நூலாகும். டாக்டர் ஹுஸைன் ஸர்ஹான் அவர்களின் மேற்பார்வையில் இயங்கும் மஹ்ஹதுஸ் ஸுன்னா வலைதளத்தின் கல்விப் பிரிவு இதனை உருவாக்கி உள்ளது.

alsarhaan.com

mahadsunnah.com

المُسْلِمُ الصَّغِيرُ

சிறிய (வயது) முஸ்லிம்

مَتْنٌ يَشْتَمِلُ عَلَى مَبَادِئِ الإِسْلَامِ وَالأَخْلَاقِ لِلطفل المسْلِمِ

முஸ்லிம் சிறார்களுக்காக, இஸ்லாத்தின் அடிப்படைகள், ஒழுக்க மாண்புகள் பற்றி தொகுக்கப்பட்ட தகவல்கள்.

بِسْمِ اللهِ الرَّحْمَنِ الرَّحِيمِ

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

القِسْمُ الأَوَّلُ

முதல் வகை

إِيمَانِى

என்னுடைய ஈமான்

أَنَا مُسْلِمٌ

நான் ஒரு முஸ்லிம்

اللهُ رَبِّى .

அல்லாஹ் எனது ரப்பு ஆவான்.

 وَمُحمَّدٌ -صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ- نَبِيِّى

முஹம்மத் (ஸல்) அவர்கள் எனது நபி ஆவார்கள்.

 وَالإِسْلَامُ دِينِى .

இஸ்லாம் எனது மார்க்கம் ஆகும்.

أَنَا أُحِبُّ اللهَ تَعَالَى :

நான் அல்லாஹ்வை நேசிக்கிறேன்.

لِأَنَّهُ رَبُّ العَالَمِينَ, الرَّحْمَنُ الرَّحِيمُ, مَالِكُ يَوْمِ الدِّينِ .

ஏனெனில் அவன்தான் அகிலத்தின் இரட்சகன்,
அளவற்ற அருளாளன் மிகக் கிருபையுடையவன்.
(அவனே) நியாயத் தீர்ப்பு நாளின் அதிபதி.

وَلِأَنَّهُ خَلَقَنِى وَرَزَقَنِى وَجَعَلَنِى مُسْلِمًا .

ஏனெனில் அவன்தான் என்னைப் படைத்தான்,
எனக்கு ரிஜ்க் அளித்தான், என்னை முஸ்லிமாக
.ஆக்கினான்.

وَأُحِبُّ النَّبِىَّ -صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ-:

நான் நபி (ஸல்) அவர்களை நேசிக்கிறேன்.

لِأَنَّ اللهَ أَرْسَلَهُ إِلَيْنَا, فَعَرَّفَنَا بِاللهِ, وَعَلَّمَنَا القُرْآنَ .

ஏனெனில் அல்லாஹ்ற அவர்களை நம்மை நோக்கி தூதராக அனுப்பியுள்ளான், அவர்கள் நமக்கு அல்லாஹ்வை அறிமுகப்படுத்தினார்கள், நமக்கு அல்குர்ஆனை கற்றுக் கொடுத்தார்கள்.

وَلِأَنَّهُ -صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ- رَؤُوفٌ رَحِيمٌ أَخْلَاقُهُ عَظِيمَه وَصِفَاتُهُ جَمِيلَةٌ

ஏனெனில் நபி (ஸல்) அவர்கள் இரக்கமுடையவர், கருணையுடைவர் ஆவார்கள். அவர்களின் நற்குணங்கள் மகத்தானதாகும், அவர்களின் பண்புகள் அழகானதாகும்.

وَأُحِبُّ دِينِىَ الإِسْلَامَ

நான் எனது மார்க்கமான இஸ்லாத்தை நேசிக்கறேன்.

لِأَنَّهُ الدِّينُ الحَقُّ الَّذى رَضيهُ اللهُ لَنَا, وَجَاء بِهِ نَبِيُّنَا صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ.

ஏனெனில் இஸ்லாம் தான் சத்தியமான மார்க்கமாகும். அதைத் தான் அல்லாஹ்ற நமக்காக பொருந்திக் கொண்டான். அதனை நமது நபி (ஸல்) அவர்கள் கொண்டு வந்தார்கள்.

.

وَلِأَنَّ مَنْ تَمَسَّكَ بِهِ دَخَلَ الجَنَّةَ, وَمَنْ تَرَكَهُ دَخَلَ النَّارَ .

ஏனெனில் எவர் அதனை பற்றிப்பிடிப்பாரோ, அவர் சொர்க்கத்தில் நுழைவார். எவர் அதனை விட்டுவிடுவாரோ, அவர் நரகத்தில் நுழைவார்.

وَأَرْكَانُ الإِسْلَامِ خَمْسَةٌ :

இஸ்லாத்தின் தூண்கள் ஐந்தாகும்

شَهَادَةُ أَلَّا إِلَهَ إِلَّا اللهُ وَأَنَّ مُحَمَّدًا رَسُولُ اللهِ .

உண்மையான வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்றும், நிச்சயமாக முஹம்மத் (ஸல்) அல்லாஹ்வின் துதர் என்றும் சாட்சியம் அளிப்பது.

إِقَامُ الصَّلَاةِ .

தொழுகையை நிலைநாட்டுவது.

إِيتَاءُ الزَّكَاةِ .

ஜகாத் வழங்குவது.

صَوْمُ رَمَضانَ .

ரமளான் நோன்பை நோற்பது.

وَحَجُّ بَيْتِ اللهِ الحَرَامِ

அல்லாஹ்வின் புனிதமிக்க இல்லத்தை ஹஜ் (தரிசிப்பது) செய்வது.

وَأَرْكَانُ الإيمَانِ سِتَّةٌ :

ஈமானின் தூண்கள் ஆறாகும்

1- الإيمَانُ بِاللهِ.

அல்லாஹ்வின் மீது ஈமான் கொள்வது.

2- وَالإيمَانُ بِالمَلَائِكَهِ .

மலக்குகள் மீது ஈமான் கொள்வது.

3- وَالإيمَانُ بِالكُتُبِ.

வேதங்கள் மீது ஈமான் கொள்வது.

4- وَالإيمَانُ بِالرُّسُلِ.

தூதர்கள் மீது ஈமான் கொள்வது.

5- وَالإيمَانُ بِاليَوْمِ الآخِرِ.

மறுமை நாளின் மீது ஈமான் கொள்வது.

6- وَالإيمَانُ بِالقَدَرِ خَيْرِهِ وَشَرِّهِ .

விதியின் மீது ஈமான் கொள்வது.

 وَأُحِبُّ كُلَّ مَا يُحِبُّهُ اللهُ وَرَسُولُهُ .

அல்லாஹ்வும், அவனது தூதரும் எதனை விரும்புகிறார்களோ, அவையனைத்தையும் நான் விரும்புகிறேன்.

 وَأَكْرَهُ كُلَّ مَا يَكْرَهُهُ اللهُ وَرَسُولُهُ .

அல்லாஹ்வும், அவனது தூதரும் எதனை வெறுக்கிறார்களோ, அவையனைத்தையும் நான் வெறுக்கிறேன்.

القِسْمُ الثانِى

இரண்டாம் வகை

صَلَاتِى

எனது தொழுகை

اللهُ خَلَقَنَا لِعِبَادَتِهِ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ, فَلَا نَعْبُدُ غَيْرَهُ, وَلَا نَدْعُو سِوَاهُ, -سُبْحَانَهُ وَتَعَالَى-.

அல்லாஹ் நம்மை, அவன் ஒருவனை மட்டுமே வணங்குவதற்காக படைத்துள்ளான். அவனுக்கு எந்த ஒரு இணையுமில்லை. அவனைத் தவிர்த்து வேறு யாரையும் நாம் அழைத்து பிராத்திக்க மாட்டோம். அவன் பரிசுத்தமானவன், உயர்ந்தவன்.

وأَعْظَمُ عِبَادَهِ : الصَّلَاةُ .

இபாதத்தில் மகத்தானது: தொழுகை

وَالصَّلَوَاتُ خَمْسٌ :

தொழுகைகள் ஐந்தாகும்

1- صَلَاةُ الصُّبْحِ : أُصَلِّى رَكْعَتَيْنِ .

ஃபஜ்ர் தொழுகை: நான் இரண்டு ரக்அத்துகள் தொழுவேன்.

2- صَلَاةُ الظهْرِ : أُصَلِّى أَرْبَعَ رَكَعَاتٍ.

லுஹர் தொழுகை: நான் நான்கு ரக்அத்துகள் தொழுவேன்.

3- صَلَاةُ العَصْرِ : أُصَلِّى أَرْبَعَ رَكَعَاتٍ .

அஸர் தொழுகை: நான் நான்கு ரக்அத்துகள் தொழுவேன்.

4- صَلَاةُ المَغْرِبِ : أُصَلِّى ثلاث رَكَعَاتٍ.

மக்ரிப் தொழுகை: நான் மூன்று ரக்அத்துகள் தொழுவேன்.

5- صَلَاة العِشَاءِ: أُصَلِّى أَرْبَعَ رَكَعَاتٍ.

இஷா தொழுகை: நான் நான்கு ரக்அத்துகள் தொழுவேன்.

- وَأُحَافِظ عَلَى الصَّلَوَاتِ فِى وَقْتِهَا, وَأُؤَدِّيهَا بِخُشُوعٍ .

தொழுகைகளை அதனுடைய நேரத்தில் நான் பேணி தொழுவேன். மேலும் அதனை இறையச்சத்துடன் நிறைவேற்றுவேன்.

- وَأَتوضأ قَبْلَ أَنْ أُصَلِّى, وَلَا أُصَلِّى أَبَدًا بِغَيرِ وُضوء.

தொழுகையை நிறைவேற்றுவதற்கு முன்பு நான் உளூ செய்து கொள்வேன். உளூ இல்லாமல் நான் ஒருபோதும் தொழுகையை நிறைவேற்ற மாட்டேன்.

القِسْمُ الثالِث

.மூன்றாம் வகை

أَخْلَاقِى

எனது ஒழுக்க மாண்புகள்

وَاللهُ يُحِبُّ: الأَخْلَاقَ الحَسَنَةَ وَيَكْرَهُ الأَخْلَاقَ السَّيِّئَةَ.

அல்லாஹ் அழகான நற்குணங்களை
விரும்புகிறான். தீய குணங்களை வெருக்கிறான்.

وَالنَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ جَاء لِيُتَمِّمَ مَكَارِمَ الأَخْلَاقِ.

நபி (ஸல்) அவர்கள் ஒழுக்க மாண்புகளில்
உயர்ந்தவற்றை பரிபூரணப்படுத்தவதற்காக
வந்தார்கள்.

فَعَلَيَّ أَنْ أَتَّصِفَ بِالأَخْلَاقِ الحَسَنَةِ :

அழகான ஒழுக்க மாண்புகளை நான் (எனது)
பண்பாக்கி கொள்வது என்மீது கடமையாகும்.

كَالصِّدْقِ, وَالوَفَاء, وَالأَمَانَةِ, وَالشَّجَاعَةِ, وَالكَرَمِ, وَحُسْنِ الكَلَامِ, وَاحْتِرَامِ المُعَلِّمِ, وَتَوْقِيرِ الكَبِيرِ.

உதாரணத்திற்கு: உண்மை பேசுதல், வாக்குறுதி
பேணுதல், அமானிதம், வீரம், கொடை,

வார்த்தைகளில் அழகானவை, ஆசிரியரை மதித்தல், பெரியோர்களை கண்ணியப்படுத்துதல்.

.

 وَأَبْتَعِدُ عَنِ الأَخْلَاقِ السَّيِئَهِ :

தீய குணங்களை விட்டு நான் தூரமாகி கொள்வேன்

كَالكَذب, وَالخِيَانَهِ, وَالضعْفِ, وَالبُخْلِ, وَالكَلَامِ البَذِىء, وِعَدَمِ الاِحْتِرَامِ.

உதாரணத்திற்கு: பொய் பேசுதல், மோசடி செய்தல், கஞ்சத்தனம், கோழைத்தனம், அருவருக்கதக்க வார்த்தைகளை பேசுவது, கண்ணிய குறைவாக நடத்தல்.

قَالَ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ : ((إِنَّ أَقْرَبَكُم مِنِّى مَنْزِلًا يَومَ القِيَامَهِ أَحَاسِنُكُم أَخْلَاقًا فِى الدُّنْيا)) .

அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள், நிச்சயமாக இவ்வுலகில் உங்களில் ஒழுக்கத்தில் சிறந்தவரே, கியாமத் நாளன்று அந்தஸ்தில் என்னிடத்தில் உங்களில் மிக நெருக்கமானவராக இருப்பார்.

خَاتِمَةٌ

முடிவுரை

العِلْمُ نُورٌ , وَالجَهْلُ ظلاّمٌ

கல்வி வெளிச்சமாகும், அறியாமை இருளாகும்.

فَأَجْتَهِدُ فِى طلّبِ العِلْمِ, وَأَبْذلُ جُهْدِي فِى تَحْصِيلِهِ, لِيرْضى عَنِّى رَبِّى, وَيُدْخِلّنِى الـجَنَّةَ .

கல்வியை தேடுவதில் நான் முயற்சிப்பேன். அதனை பெறுவதில் எனது முழு முயற்சியையும் நான் செலவளிப்பேன். எனது ரப்பு என்னை பொருந்திக் கொள்ளட்டும், என்னை சொர்க்கத்தில் நுழைவிக்கட்டும்.

وَالأَذكَارُ حِصنٌ لِلمُسْلِمِ:

திக்ர்கள் முஸ்லிமிற்கான கோட்டையாகும்

فَأُحَافِظ عَلّى أَذكَارِ الصَّبَاحِ وَالمَسَاء, وَمِنْهَا: قِراءة آية الكُرْسِى, وَسُورَةِ الإخلّاصِ والمُعَوِّذتَيْنِ .

நான் காலை, மாலை திக்ர்களை பேணி ஓதிக் கொள்வேன். அவற்றிலிருந்து (சில) ஆயத்துல் குர்ஸி, சூரத்துல் இக்லாஸ் மற்றும் (முஅவிதத்தைன் (சூரத்துல் ஃபலக் மற்றும் நாஸ்)

وَالدُّعَاء مِفْتَاحُ النَّجَاحِ وَالفَلَاحِ.

துஆ ஈடேற்றம், வெற்றிக்கான சாவியாகும்.

فَأَدْعُو اللهَ كَثِيرًا فِى كُلِّ وَقْتٍ: فِى السُّجُودِ, وَبَعْدَ الأَذَانِ, وَفِى اللَّيْلِ.

நான் அல்லாஹ்விடம் எல்லா நேரங்களிலும் அதிகமாக துஆ கேட்பேன். ஸஜ்தாவில், பாங்கிற்கு பிறகு, இரவு தொழுகையில்.

وَمِنَ الدُّعَاءِ:

துஆக்களிலிருந்து

- اللَّهُمَّ اهْدِنِى وَسَدِّدْنِى .

அல்லாஹ்! என்னை நேர்வழிப்படுத்தி, அதில் என்னை உறுதியாக்கி வைப்பாயாக!

- اللَّهُمَّ زِدْنِى عِلْمًا .

அல்லாஹ்! கல்வி ஞானத்தை எனக்கு அதிகப்படுத்துவாயாக!

- اللَّهُمَّ اغْفِرْ لِى وَلِوَالِدَىَّ وَارْحَمْهُمَا .

அல்லாஹ்! என்னையும், எனது
பெற்றோர்களையும் மன்னித்தருள்வாயாக!
மேலும் அவர்கள் இருவருக்கும் அருள்புரிவாயாக!

اللَّهُمَّ آتِنِى فِى الدُّنْيَا حَسَنَةً, وَفِى الْاٰخِرَةِ حَسَنَةً, وَقِنِى عَذَابَ النَّارِ .

யா அல்லாஹ்! எனக்கு இவ்வுலகில்
நற்பாக்கியங்களை தந்தருள்வாயாக.
மறுமையிலும் நற்பாக்கியங்களை
தந்தருள்வாயாக! இன்னும் என்னை நரக
நெருப்பின் வேதனையிலிருந்து
காப்பாற்றுவாயாக!

تَمَّ بِحَمْدِ اللهِ

அல்லாஹ்வின் புகழுடன் நிறைவுற்றது...